www.Padasalai.Net www.CBSEtips.in

Tsi12T

**தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்**

**இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - நவம்பர் 2022**

**வகுப்பு 12**

நேரம் : 1.30 மணி **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள்: 45

**I. பலவுள் தெரிக:** **10×1=10**

1) வேறுபட்டதைக் குறிப்பிடுக.

அ) அண்மைக் காட்சித்துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித்துணிப்பு

இ) நடுக்காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு

2) **பொருத்துக:**

அ) ஆமந்திரிகை - 1. பட்டத்து யானை

ஆ) அரசு உவா - 2. மூங்கில்

இ) கழஞ்சு - 3. இடக்கை வாத்தியம்

ஈ) கழை - 4. எடை அளவு

அ) 3 1 4 2 ஆ) 4 2 1 3 இ) 1 2 3 4 ஈ) 4 3 2 1

3) ஆர்ப்பரிக்கும் கடல்

அதன் அடித்தளம் மௌனம்,

மகா மௌனம் - அடிகள் புலப்படுத்துவது

அ) இரைச்சல்

ஆ) குறைகுடம் கூத்தாடும்

இ) நிறைகுடம் தளும்பாது

ஈ) புற அசைவுகள் அகத்திணை அசைக்க இயலாது

4) தேவையற்ற காட்சிகளை நீக்கி, தேவையான காட்சிகளைப் பொருத்தமான வகையில் சேர்ப்பது

அ) குலஷோவ் விளைவு ஆ) ஒலிக்குறிப்பு

இ) படத்தொகுப்பு ஈ) ஒற்றைக்கோணம்

5) முத்தமிழ் காப்பியம் எனப்படும் நூல்

அ) சிலப்பதிகாரம் ஆ) கம்பராமாயணம்

இ) சீவகசிந்தாமணி ஈ) மணிமேகலை

6) நடிகர் திலகத்திற்கு 'சிவாஜி கணேசன்' என்று பெயரிட்டவர்

அ) அண்ணாதுரை ஆ) பெரியார் இ) காமராசர் ஈ) இராஜாஜி

7) திண்ணியர் என்பதன் பொருள்

அ) அறிவுடையவர் ஆ) மனஉறுதியுடையவர்

இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்

8) 'பலர் துஞ்சவும் தான் துஞ்சான்' - விழித்திருந்த வரும், அவரைப் பாடியவரும்

அ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர்

ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்

இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர்

ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்

9) 'உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில்' - இத்தொடரில் பெயரெச்சம்

அ) உண்டு ஆ) பிறந்து இ) வளர்ந்த ஈ) இடந்தனில்

10) அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது

அ) கடந்த காலத் துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதை

இ) பச்சையம் இழந்த நிலத்தை ஈ) அனைத்தையும்

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



**II. எவையேனும் நான்கனுக்கு விடை தருக:** 4×2=8

11) எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?

12) பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.

13) ஒருமுக எழினி, பெருமுக எழினி - குறிப்பு எழுதுக.

14) வறுமையும் சிறுமையும் தருவது எது?

15) பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

16) ''மூச்சு நின்று விட்டால்
பேச்சும்
அடங்கும்'' - கவிதைக்குப் பொருத்தமான பழமொழி ஒன்றை எழுதுக.

**III. எவையேனும் நான்கனுக்கு விடை தருக:** 4×4=16

17) நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து எழுதுக.

18) ஏதேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையைக் கற்பனையாகப் படைக்க.

19) திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

20) ''அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார்'' - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

21) வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

22) அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ்நதி கூறுகிறார்?

**IV. ஏதேனும் ஒன்றனுக்கு விடை தருக:** 1×5=5

23) அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணைநிற்கும் என்பதை வள்ளுவம் வழிநின்று நிறுவுக.

24) மகா நடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

25) நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**V. மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக:** 4+2=6

26) அ) 'காய்நெல்' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.

ஆ) 'உடைத்து' என முடியும் திருக்குறள்.

சிவக்குமார், மு. ஸ்ரீராம் மெட்ரிக் மே.நி.ப
வல்லம் - 627809, தென்காசி.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593